சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
நெ.1, காந்தி–இர்வின் சாலை, தாளமுத்து நடராசன் மாளிகை, எழும்பூர், சென்னை– 600 008.

**சென்னைப்பெருநகர் பகுதிக்கான வளர்ச்சி விதிகளின் கீழ் வளர்ச்சி உரிமை மாற்றத்திற்கான (TDR) வழிகாட்டிகள்:**

(i) முழுமைத்திட்டம்/விரிவான வளர்ச்சித் திட்டத்தின் உத்தேசங்கள் அல்லது வளர்ச்சி விதிகளில் இணைப்பு XX1–ல் விதி எண் 1–ல் பட்டியலிடப்பட்டுள்ள மற்ற எந்தவொரு வளர்ச்சிப் பணிகளால் நிலத்தின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டால், வளர்ச்சி விதிகளில் கூறப்பட்டுள்ள வளர்ச்சி உரிமை மாற்றம் வழங்குவதற்கான விதிமுறைகளின்படி, பதிவு செய்யப்பட்ட தானப் பத்திரத்தின் மூலம் அத்திட்டத்திற்குத் தேவையான, பகுதிநிலத்தை வழங்கிய பிறகே, அம்மனையின் மிகுதிப் பகுதியில் கட்டப்படுகின்ற கட்டுமானங்களுக்கான விண்ணப்பம், உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (அல்லது திட்ட அனுமதி வழங்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள தகுதியுடைய அதிகாரி) அவர்களால் கருத்தில் கொள்ளப்படும்.

(ii) (அ) மேலே பத்தி (1)ல் குறிப்பிட்டவாறு, உத்தேச வளர்ச்சிகளுக்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் பெறப்படாத, மற்ற நேர்வுகளில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (அல்லது திட்ட அனுமதி வழங்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதற்கான உள்ளாட்சி நிறுவனம்) சாலை அகலப்படுத்துதல் அல்லது புதிய சாலை அமைத்தல், போக்குவரவு மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்பு வளர்ச்சிபணிகள் மற்றும் எந்தவொரு நகர உள்கட்டமைப்பு வளர்ச்சி பணிக்களுக்கான வளர்ச்சி உரிமை மாற்றம் வழங்குவதற்காக திட்டங்களை வெளியிடலாம்.

(ஆ)மேற்குறிப்பிட்ட வெளியீட்டிற்கு பிறகு, நில சொந்தக்காரார், உறுப்பினர்–செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (அல்லது அதற்கான உள்ளாட்சி நிறுவனத்தின் செயல் அலுவலர்) அவர்களிடம் வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்

(iii) ஒரு வேளை ஏற்கனவே மனையில் கட்டிடம் கட்டப்பட்டிருந்தால், அதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். திட்ட அனுமதி பெறப்பட்டிருந்தாலும் அல்லது அனுமதியற்ற கட்டிடமாக இருந்தாலும், பொது உபயோகத்திற்கு தேவைப்படுகின்ற பகுதி நிலம், வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்க தகுதி வாய்ந்ததாகும்.

---

*தமிழ்நாடு அரசிதழ் எண்.45 பகுதி –VI பிரிவு–1 நாள் 18.11.2009 ல் வெளியிடப்பட்டது* *விலை ரூ.10/–*

iv) ஒருவேளை, மனையில் ஏற்கனவே கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்து, வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் பெறுவதற்காக நிலம் வழங்கப்பட்டு அதனால் மிகுதி நிலத்தில் ஏற்கனவேயுள்ள கட்டிடத்திற்கான திட்ட அளவுகள் குறைந்து அக்கட்டிடம் வளர்ச்சி விதிமுறைகளை மீறினால், எந்தவொரு கூடுதல் கட்டுமானம் அல்லது மாற்றம் அல்லது கட்டிட உபயோக மாற்றம் செய்யப்படாத பட்சத்தில் அக்கட்டிடம் வளர்ச்சி விதிகளுக்கு பொருந்தியதாகக் கருதப்படும். இருந்தாலும் இக்கட்டிடங்கள் அனுமதி பெற்று கட்டப்பட்டவையாகவும் அல்லது 05.8.1975க்கு முன் கட்டப்பட்டதாகவும் இருக்க வேண்டும், (*பொது நல உபயோகம் என்பது எந்தவொரு தனிமனிதனின் விருப்பம்/தேவைகளைவிட முக்கியமானதாகும். அதனால் மிகுதியுள்ள மனையில் எந்தவொரு விதி மீறல் ஏற்பட்டாலும் அதுவிதி மீறியதாகக் கருதப்படாது*).

(v) ஒரு மனையில் அனுமதியற்ற கட்டிடம் இருப்பதனால், நில சொந்தக் காரருக்கு, பொது உபயோகத்திற்காக தேவைப்படுகின்ற நிலத்திற்கான வளர்ச்சி உரிமைச் சான்றிதழைப் பெறுவதற்கு எந்தவொரு தடையும் இல்லை. ஆனால் மிகுதியுள்ள நிலத்தில் இருக்கும் கட்டிடம் இடிக்கப்பட்டு அல்லது சட்டம்/விதிகளுக்கு இணங்க முறைப்படுத்தப்படும் வரை, அனுமதியற்ற கட்டிடமாக தொடர்ந்து கருதப்படும்.

(vi) கூடுதல் தரைப்பரப்பை கணக்கிட, வளர்ச்சி உரிமை பயன்படுத்தப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட நிலங்களின் வழிகாட்டி மதிப்பனாது, வளர்ச்சி உரிமைச் சான்றிதழை பயன்பப்படுத்த விண்ணப்பிக்கும் சமயத்திலுள்ள வழிகாட்டி மதிப்பையே (GLV) எடுத்துக் கொள்ள வேண்டும்.

(vii) (அ) திட்ட அனுமதி பெற விண்ணப்பிக்கும், விண்ணப்பதாரர் ஒப்புவிக்கப்பட்ட மனையின் மிகுதிப் பகுதியிலேயே பயன்படுத்தும் பொழுது :

ஒப்புவித்த / ஒப்புவிக்கப்படுகின்ற பகுதி நிலத்திற்கான வளர்ச்சி உரிமையை அவரிடமேயுள்ள அந்த மனையின் மிகுதிப் பகுதியிலேயே பயன்படுத்துவதற்காக, உத்தேசித்தால், இந்த விதிகளில் குறிப்பிட்டுள்ள தரைப்பரப்பு குறியீட்டைப் பெற தகுதி பெறுவர் (அதாவது வழிகாட்டி மதிப்பின் மூலம் ஊக்கங்கள் அனுமதிக்கப்பட்டபிறகு) தகுதியுள்ள தரைபரப்பு குறியீட்டின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | மனை (ஒப்புவிக்கப்பட்ட நிலத்திலிருந்து) கீழ் குறிப்பிட்ட தரைபரப்பு குறியீட்டிற்கு தகுதி பெறும் பொழுது | ஒப்புவிக்கப்பட்ட நிலத்திற்குரிய வளர்ச்சி உரிமை மாற்றத்திற்கான தரைப்பரப்பு குறியீடு |
|---|---|---|
| 1 | பல அடுக்குமாடி கட்டிடம் அல்லாத ≤ 1.50 வரை | 2.25 |
| 2 | பல அடுக்குமாடி கட்டிடம் 1.75 | 2.25 |
| 3 | பல அடுக்குமாடி கட்டிடம் 2.00/2.25 | 2.50 |
| 4 | பல அடுக்குமாடி கட்டிடம் 2.50 | 2.75 |

இந்த மாதிரி சமயங்களில் தனியாக வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்குவதற்கான அவசியம் ஏற்படாது.

(ஆ) ஒப்புவிக்கப்பட்ட நிலத்திலுள்ள மனையல்லாமல் வேறொரு மனையில் பயன்படுத்தப் படும் பொழுது:

வளர்ச்சி உரிமை மாற்றம் வேறொரு மனையில் பயன்படுத்தப்பட்டால் (அதாவது ஒப்புவிக்கப்பட்ட நிலத்திலுள்ள மனையின் மிகுதிப் பகுதியில் இல்லாமல்) வளர்ச்சி உரிமை மாற்றத்திற்கான தரைப்பரப்பு குறியீடு கீழ் கண்டவாறு இருக்கும்.

| வரிசை எண் | மனை (ஒப்புவிக்கப்பட்ட நிலத்திலிருந்து) கீழ் குறிப்பிட்ட தரைபரப்பு குறியீட்டிற்கு தகுதி பெறும் பொழுது | ஒப்புவிக்கப்பட்ட நிலத்திற்குரிய வளர்ச்சி உரிமை மாற்றத்திற்கான தரைப்பரப்பு குறியீடு |
|---|---|---|
| 1 | பல அடுக்குமாடி கட்டிடம் அல்லாத ≤ 1.50 வரை | 2.25 x V |
| 2 | பல அடுக்குமாடி கட்டிடம் 1.75 | 2.25 x V |
| 3 | பல அடுக்குமாடி கட்டிடம் 2.00/2.25 | 2.50 x V |
| 4 | பல அடுக்குமாடி கட்டிடம் 2.50 | 2.75 x V |

*V என்பது வளர்ச்சி உரிமைச்சான்றிதழை பயன்படுத்தபோகும் ஒப்புவிக்கப்பட்ட நிலத்தின் வழிகாட்டி மதிப்பை, – பயன்படுத்தும் நிலத்தின் வழிகாட்டி மதிப்பால் வகுப்பதால் பெறப்படும், பெருக்குவதற்கான காரணக் கூறு ஆகும்.*

(இ) ஒப்புவிக்கப்பட்ட நிலத்திற்கு, பொதுவாக அனுமதிக்கப்படும் தரைப்பரப்பு குறியீடு 2.00 அல்லது அதற்கு மேலாக உரிமை கோரப்படும் நேர்வுகளில், ஒப்புவிக்கப்பட்ட மனையில் ஏற்கனவேயுள்ள கட்டிடத்தின் விரிவான வரைபடத்தை சமர்ப்பித்து, வளர்ச்சி விதிகளின் படி பல அடுக்கு மாடி கட்டிடங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற அதிகமான தரைபரப்பு குறியீட்டிற்கு அந்த மனை தகுதி பெறுகிறதென்பதை நிரூபிப்பது மனுதாரரின் பொறுப்பாகும்.

(viii) வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் முதலில் 5 வருடங்களுக்கு மட்டுமே செல்லத் தக்கதாகும். குழுமத்தால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணத்தை செலுத்தும் பட்சத்தில் மேலும் 5 வருடங்களுக்கு புதுப்பித்து கொள்ளலாம்.

(ix) (அ) வளர்ச்சி உரிமை சான்றிதழுக்கான விண்ணப்பம் இணைப்பு – அ வில் குறிப்பிட்டுள்ளபடி தேவைப்படுகின்ற விவரங்கள் மற்றும் ஆவணங்களுடன் இருக்க வேண்டும்.

(ஆ) உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமும் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாக்க அலுவலரால் வழங்கப்படும் வளர்ச்சி உரிமைச் சான்றிதழின் படிவம் இணைப்பு–ஆ வில் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்கல், வளர்ச்சி உரிமை சான்றிதழில் மாற்றம் ஏதாவது இருந்தால், மற்றும் வளர்ச்சி உரிமைச் சான்றிதழின் பயன்பாடு குறித்த தகவல் இணைப்பு –இ வில் குறிப்பிட்டவாறு பதிவேட்டில் வைக்கப்படும்.

(ஈ) வளர்ச்சி உரிமை சான்றிதழ் வைத்திருப்பவர்கள் அதனை பயன்படுத்துவதற்கு இணைப்பு–ஈ யில் குறிப்பிட்டபடி படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.

(x) உறுப்பினர் – செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாக்க அலுவலரின் அவர்களால் கீழ்கண்ட சூழ்நிலைகளில் வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் ரத்து செய்யப்படலாம்.

(அ) வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் மோசடியின் பேரில் பெறப்பட்டால்

(ஆ) நில உடைமை அல்லது வளர்ச்சி உரிமைகளை குறைப்பதற்குரிய எந்தவொரு வில்லங்கம் சொத்தின் பேரில் இருந்தால் அல்லது உரிமையின் பேரில் தகராறு இருந்தால்

(xi) வளர்ச்சி விதியில் இணைப்பு XXI – ல் விதி எண் 1–ல் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு வளர்ச்சி பணிகளுக்காகவும் வளர்ச்சி உரிமை மாற்ற விதிகளின் கீழ், நிலம் உடைமைப்படுத்த முடியாவிட்டால், நில கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் பொது துறையால் வளர்ச்சிப் பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு உடமையாக்கப்படும். இதனால் திட்டங்கள் எந்தவொரு தடையும் தாமதமும் இல்லாமல் செயலாக்க முடியும்.

(xii) ஒப்புவிக்கப்பட்ட மற்றும் நில உடமையாளரால் இருத்தி வைக்கப்பட்ட மிகுதி நிலத்திற்கு இடையேயுள்ள எல்லை கோட்டை ஒட்டி, மிகுதியுள்ள மனையில் கட்டிடங்கள் உத்தேசிப்பதற்கு அந்தந்த நேர்வுகளின் நற்கூறுகளைப் பொறுத்து பல அடுக்குமாடி கட்டிடங்கள் அல்லாத நேர்வுகளில் பக்க இடைவெளிகளின் தேவைகளை திட்டக்குழுமம் தளர்த்தலாம்.

,இந்த தமிழ் மொழி பெயர்ப்பிற்கும் , ஆங்கில மூலப்படிக்கும் ஏதேனும் வேறுபாடு இருந்தால், ஆங்கில மூலப்படியின், அர்த்தமே கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

இணைப்பு–அ

## வளர்ச்சி உரிமைச் சான்றிதழுக்கான விண்ணப்ப படிவம்

விடுநர்

நில உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பெறுநர்

உறுப்பினர்–செயலர்,
சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எழும்பூர்,
சென்னை – 8.

ஐயா,

சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தில் ............................ பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட/............................... விரிவான வளர்த்திட்டம்/ ........................ அரசுத் துறை அல்லது முகமை அல்லது ............................... உள்ளாட்சி நிறுவனத்தால், பண இழப்பீட்டிற்கு பதிலாக வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்க அறிவிக்கப்பட்ட, ......................... .மாவட்டம் .......................... தாலுக்கா ............... கிராமத்தில் ................... நில அளவை எண் .......................பகுதி எண்..............நகர நில அளவை எண்–ல் அமைந்துள்ள சுமார் .................... ச. மீட்டர் பரப்புள்ள நிலத்தை பகுதி /முழுவதும் ஒப்படைக்க இசைந்துள்ளேன்/இசைந்துள்ளோம்.

நான்/நாங்கள் இத்துடன் கீழ்கண்டவற்றை இணைத்துள்ளேன்/இணைத்துள்ளோம்

i. ஏற்கனவே மனையிலுள்ள கட்டிடத்தின் விவரங்கள் மற்றும் மனுதாரருக்கு சொந்தமான மனையின் பரப்பளவு ஆகியவற்றை காட்டிய மனை வரைபடம்

ii. துணை வட்டாட்சியர் நிலைக்கு குறையாத வருவாய்த்துறை அதிகாரிகளால் சான்றொப்பம் இடப்பட்ட மனைக்கான நில அளவை வரைபடம்/நிலையான நில பதிவேட்டின் நகல்

iii. வளர்ச்சி உரிமைச் சான்றிதழுக்காக சமர்ப்பித்த நிலத்தின் மேல் மனுதாரருக்கு முழு உரிமை இருக்கிறதென்பதை நிரூபிக்க உரிமை ஒப்பாவணம்

iv. வளர்ச்சி உரிமைச் சான்றிதழுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிலத்திற்கான, வகை –1 நில அளவையாளராக தகுதிச் சான்றிதழ் பெற்றுள்ள கட்டிட வல்லுநர் (அ) கட்டிடப் பொறியாளர் அவர்களால் சான்றிதழ் அளிக்கப்பட்ட பரப்பு அறிக்கை

v. 20 வருடத்திற்கான வில்லங்கச் சான்றிதழ்

நான்/நாங்கள் தற்பொழுது வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வேண்டி சமர்ப்பித்த நிலத்திற்கு இதற்குமுன் வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் அல்லது எந்தவொரு பண இழப்பீடும் பெறவில்லை என்பதை அறிவிக்கிறேன்/அறிவிக்கிறோம்.

வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் மோசடியின் பேரில் பெறப்பட்டிருந்தால் மற்றும் சொத்தின் பேரில் வில்லங்கள் இருப்பது அல்லது உரிமையின் பேரில் தகராறு இருப்பது பின்னர் தெரிய வந்தால் வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் ரத்து செய்யப்படும் என்ற கட்டுப்பாடு உள்பட மற்ற அறிவிக்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் சென்னைப் பெருநகரப் பகுதிக்கான வளர்ச்சி விதி இணைப்பு XXI –ல் குறிப்பிடப்பட்ட கட்டுபாடுகள் மற்றும் விதிகளுக்கு நான் உடன்படுகிறேன்.

நில உரிமையாளர்/
நில உரிமையாளர்கள் கையொப்பம்

இணைப்பு

இணைப்பு – ஆ

# வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்

உறுப்பினர்–செயலர் அலுவலகம்
சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
எழும்பூர், சென்னை–600 008.

தமிழ் நாடு நகர் மற்றும் ஊரக வளர்ச்சி சட்டம் , 1971 கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தின் ஒரு பகுதியான வளர்ச்சி விதி எண்.9 ற்குட்பட்டு (இணைப்பு XXI –ல் கொடுக்ககப்பட்டுள்ள வளர்ச்சி உரிமை மாற்றத்திற்கான விதிகள் மற்றும் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வழிமுறைகளுடன் சேர்த்து வாசிக்கவும்) சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பெயர் கொண்ட நபர், வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட பதிவு பெற்ற உடமையாளர் என்பதை எண்.1, காந்தி–இர்வின் சாலை, எழும்பூர், சென்னை – 600 008ல் அலுவலகம் கொண்ட உறுப்பினர் – செயலர் ........................................ ஆன நான் சான்றழிக்கிறேன்.

அ) ஒப்பபடைப்பு செய்த நிலத்தின் இருப்பிடம் மற்றும் விவரங்கள் ........................................

ஆ) முழுமைத்திட்டம் /விரிவான வளர்ச்சித் திட்டம் அல்லது ..................................................

.......................................................................................................................... ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2. வளர்ச்சி உரிமைச் சான்றிதழ், அதற்கென அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சி விதிகளில் உள்ள கட்டுபாடுகளுக்குட்பட்டு உபயோகப்படுத்தலாம்.

i) சான்றிதழ் எண். ......................................................................................................................

ii) சான்றிதழ் உடமையாளரின் பெயர்...............................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

iii) தரைபரப்பு குறியீட்டு வரவிற்கு தகுதிபெற்ற நிலத்தின் பரப்பு..............................
பொது முத்திரையின் கீழ் ........................................நாளன்று ............................................. வருடத்தில் வழங்கப்பட்டது.

முதுநிலை திட்ட அமைப்பாளர்/தலைமைத் திட்ட அமைப்பாளர்
பரப்பு திட்டப் பிரிவு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
சென்னை–600 008.

உறுப்பினர்–செயலர்,
செ.பெ.வ.கு.

<u>இணைப்பு–இ</u>

# வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் விவரங்கள் கொண்ட பதிவேடு

(i) நில அளவை எண்

(ii) இணைப்பு எண்

(iii) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும கோப்பு எண்

(iv) வளர்ச்சி உரிமை சான்றிதழ் வேண்டி செ.பெ.வ.குழுமத்தில் சமர்பித்த தேதி

(v) வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் நாள் மற்றும் ஒப்புதல் அளித்த குழுமம்/துறை

(vi) வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் எண்

(vii) வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் தொடக்கத்தில் வழங்கப்பட்டவர்கள் …………………………….....

(viii) ஒப்படைப்பு செய்யப்பட்டட நிலத்தின் விவரங்கள்

அ) நில அளவை எண்
ஆ) நகர நில அளவை எண்
இ) பகுதி எண்
ஈ) கிராமத்தின் பெயர்
உ) பகுதி எண்
ஊ) மாவட்டம்
எ) ஒட்டியுள்ள தெருவின் பெயர்
ஏ) ஒவ்வொரு நில அளவை எண்ணிலுள்ள நிலத்தின் பரப்பு

(ix) உபயோகத்திற்காக வேண்டி சமர்பித்த தேதி

(x) மாற்றப்படுவரின் பெயர்

(xi) வளர்சசி உரிமைச் சான்றிதழ் உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் விவரங்கள்

அ) நில அளவை எண்
ஆ) நகர நில அளவை எண்
இ) பகுதி எண்
ஈ) கிராமத்தின் பெயர்
உ) பகுதி
ஊ) மாவட்டம்
எ) ஒட்டியுள்ள தெருவின் பெயர்ங
ஏ) ஒவ்வொரு நில அளவை எண்ணிலுள்ள நிலத்தின் பரப்பு

(xii) வளர்ச்சி உரிமைச் சான்றிதழில் மிகுதி நிலப்பரப்பு ஏதாவது இருந்தால்

(xiii) வளர்ச்சி உரிமைச் சான்றிதழில் மிகுதி நிலத்தை உபயோகப்படுத்த வேண்டி சமர்ப்பித்த தேதி

(xiv) வளர்ச்சி உரிமைச் சான்றிதழில் மிகுதி வளர்ச்சி உரிமையை உபயோகப்படுத்தப்படும் நிலங்களின் விவரங்கள்

அ) நில அளவை எண்
ஆ) நகர நில அளவை எண்
இ) பகுதி எண்
ஈ) கிராமத்தின் பெயர்
உ) பகுதி
ஊ) மாவட்டம்
எ) ஒட்டியுள்ள தெருவின் பெயர்ங
ஏ) ஒவ்வொரு நில அளவை எண்ணிலுள்ள நிலத்தின் பரப்பு

(Xv) குறிப்புகள்

<u>இணைப்பு—ஈ</u>

# பயன்பாட்டு விண்ணப்பம்

விடுநர்

......................................

பெறுநர்
உறுப்பினர்—செயலர்
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
1, காந்தி – இர்வின் சாலை, தாளமுத்து – நடராசன் மாளிகை
எழும்பூர், சென்னை—600 008

**ஐயா,**

………………………….நில அளவை எண் / நகர நில அளவை எண் ……………………………… பகுதி எண்……………………கிராமத்தில் …………………தாலுக்காவில் …………………மாவட்டத்தில் கட்டப்படவுள்ள கட்டிடத்திற்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் பயன்படுத்த அனுமதி வேண்டி, கீழே கையொப்பமிட்டுள்ள நான்/நாங்கள் கேட்டுக் கொள்கிறேன் / கேட்டுக் கொள்கிறோம். இதற்காக ………….. (பெயர்) …………….முகவரி கொண்டவரால் திட்ட அனுமதி வேண்டி விண்ணப்பிக்கப்பட்டு செ.பெ.வ.குழும கோப்பு எண்…………………….ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

<u>வளர்ச்சி உரிமைச் சான்றிதழின் விவரங்கள்</u>

வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் எண்.............................................................

இவரின்/இவர்களின் பெயரில் வழங்கப்பட்டது

| **முழுப்பெயர்** | **கையொப்பம்** |
|---|---|
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |

நான்/நாங்கள், ..................................................................ல் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி விண்ணப்பத்தின் மனுதாரர் / மனுதாரர்கள் மேற்குறிப்பிட்ட நபரின்/நபர்களின் பெயரில் வழங்கப்பட்ட வளர்ச்சி உரிமை சான்றிழை பயன்படுத்த விரும்புகிறேன் / விரும்புகிறோம். என்னுடைய / எங்களுடைய வளாகத்தில் பயன்படுத்தக் கூடிய தகுதி பெற்ற தளப்பரப்பை அனுமதிக்க சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தை கேட்டுக் கொள்கிறேன்/கொள்கிறோம்.

| முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |
| ................................................................................... | ............................................................ |

சான்றுதி அலுவரின் சான்றொப்பம் ......................................................................

நான் இங்கு வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் உடமையாளர் மற்றும் மேற்குறிப்பிட்ட திட்ட அனுமதி விண்ணப்பதாரரின் / விண்ணப்பதாரர்களின் கையொப்பம் / கையொப்பங்களை இவைகள்தான் என சான்றொப்பமிடுகிறேன்.

கையொப்பம்
பெயர்
முகவரி மற்றும் முத்திரை

சாட்சிகள் 1. 2

(ஒப்பம்) 21.10.2009 உறுப்பினர் – செயலர்,

உண்மை நகல்